செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை - 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai - 600100

பயிலரங்க எண்ணிக்கைகள்: 95 சுவடியியல் புலம் நாள்: 16.07.2025

நடத்தும்

# இந்தியக் காப்பிய மரபுகள்

## (TRADITIONS OF INDIAN EPICS)

### பயிலரங்கம் - 15

### (30.07.2025 - 08.08.2025)

### அறிவிப்பும் அழைப்பும்

உலக இலக்கிய வடிவங்களுள் காப்பிய வடிவம் மிக நீண்ட நெடிய வரலாற்றை உடையது. அதில் இந்தியக் காப்பிய மரபுகளுக்கென ஒரு தனித்த சிறப்பிடம் உண்டு. தமிழில் தண்டியலங்காரம் காப்பிய இலக்கணத்தைக் கூறி அதன் வரையறையை வழங்குகிறது. அதனடிப்படையில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என வகைப்படுத்துகிறோம்.

தமிழில் காப்பியம் என்னும் சொல் "நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்" (மணிமேகலை19:80), "காப்பியக் கோசம்" (பெருங்கதை1-38;167), "காப்பிய வாசனை" (பெருங்கதை 4-3;42), "காப்பியக் கவிகள்" (சீவகசிந்தாமணி1585), "பொருள்தொடர் நிலையே" (தண்டியலங்காரம் 7) ஆகிய இடங்களில் இடம் பெற்றுள்ளது. காவியம் என்னும் சொல்வழக்கு யசோதர காவியம், நாககுமார காவியம், உதயண குமார காவியம் என நூற்பெயரிலேயே இடம் பெற்றுள்ளமையும் நோக்கத்தக்கது. பெருந்தொகையில் "பஞ்சகாவியம்" (1259) என்றும் தமிழ்விடுதூதில் "பஞ்சகாப்பியம்" (கண்ணி-52) என்றும் குறிப்பிடக் காண்கிறோம். ஆகவே தமிழில் காப்பியம், காவியம் ஆகிய இரு சொல்லாட்சிகளும் சமகால வழக்கில் இருந்தமையை அறியலாம்.

**இந்தியக் காப்பிய மரபுகள்** என்னும் இப்பயிலரங்கில் இந்திய மொழிகளில் இயற்றப்பட்டுள்ள காப்பியங்கள், அவற்றின் செல்வாக்கு, விழுமியங்கள் ஆகியவை குறித்து ஆய்வுரைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், இந்திய மொழிகளில் தோன்றிய காப்பிய மரபுகள், அவற்றின் வளர்ச்சி குறித்துப் பல்வேறு மொழிகளைச்

சார்ந்த அறிஞர்கள் இப்பயிலரங்கில் பயிற்றுரை வழங்க உள்ளனர். முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கின்றது.

## பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் பின்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 35.
2. பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: 30.07.2025 முதல் 08.08.2025 முடிய 10 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 01.00 & மாலை 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
8. இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/hHRoXaXtz8gCvjXC8 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.
9. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
10. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
11. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

12. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 24.07.2025. கால தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தெர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 25.07.2025 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
14. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டாது.
15. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**